| விவரங்கள் | மொத்த பயிரிடப்பட்ட பரப்பளவு (ஹெக்டேரில்) | மற்ற பகுதிகள் (கட்டிடம், சாலை, இதர (ஹெக்டேரில்) | தற்போதைய மொத்த பரப்பளவு (ஹெக்டேரில்) |
|---|---|---|---|
| முந்தைய டேன்டீயின் பரப்பளவு | 4311.038 | 717.490 | 5028.528 |
| (–) | 257.280 | 19.500 | 276.780 |

| | | | |
|---|---|---|---|
| ஒப்படைக்கப்பட்ட பரப்பளவு கூடலூர் பகுதி (ஜூலை 2019ல்) | | | |
| (–) ஒப்படைக்கப்பட்ட பரப்பளவு | -- | 162.310 (சின்கோனா பிளான்டேசன்) | 162.310 (சின்கோனா பிளான்டேசன்) |
| தற்போதைய மொத்த பரப்பளவு | 4053.758 | 535.680 | 4589.438 |

**குத்தகை விவரம்**

நிலை I–III– ரூ.2000/– ஹெக். எல்லா நிலங்களுக்கும்
நிலை IV – ரூ.2000/– ஹெக். தேயிலை நிலங்களுக்கு 2003–04 முதல்
ரூ.100/– ஹெக். சின்கோனா தோட்டங்களுக்கு
ரூ.100/– ஹெக். விளைச்சலில்லா தோட்டங்களுக்கு
(மொத்த குத்தகை வருடத்திற்கு ரூ.94,14,590/–)

**3. தேயிலைத் தொழிற்சாலைகள்**

இக்கழகத்தில் அறுவடை செய்யப்படும் பசுந்தேயிலை 82.5 இலட்சம் கிலோகிராம் ஆண்டு உற்பத்தித்திறன் கொண்ட 6 நவீன தொழிற்சாலைகள் மூலம் பதப்படுத்தப்படுகிறது.

| தொழிற்சாலை | பகுதி மற்றும் அமைந்துள்ள இடத்தின் உயரம் (கடல் மட்டத்திலிருந்து) | தேயிலை தயாரிப்பு முறை | ஆண்டு உற்பத்தி அளவு (மில்லியன் கிலோவில்) | தற்போதைய கொள்ளளவு (மில்லியன் கிலோவில்) |
|---|---|---|---|---|
| சேரங்கோடு | கூடலூர் (970 மீ) | சி.டி.சி | 2.25 | 1.50 |
| டைகர்ஹில் | குன்னூர்(1780மீ) | ஆர்தோடாக் | 0.75 | 1.72 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஸ் | | |
| பாண்டியார் | கூடலூர் (910 மீ) | சி.டி.சி | 1.50 | 2.00 |
| குயின்சோலா | கோத்தகிரி(1820மீ ) | ஆர்தோடாக்ஸ் | 0.75 | 1.26 |
| நெல்லியாளம் | கூடலூர் (970 மீ) | சி.டி.சி | 1.50 | 1.50 |
| ரயான் | வால்பாறை (1200மீ) | சி.டி.சி | 1.50 | 2.25 |

**4. தொழிலாளர்கள் மற்றும் பணியாளர் நலன்**

**(அ) தொழிலாளர் / பணியாளர் எண்ணிக்கை**

இக்கழகத்தில் 3741 நிரந்தர தொழிலாளர்கள் மற்றும் 739 தற்காலிக தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இக்கழக நிரந்தர தொழிலாளர்கள் குடும்பத்திலுள்ள நபர்களுக்கு தேயிலை மகசூல் அதிகமுள்ள காலங்களில் தற்காலிக பணி வழங்கப்பட்டு வருகிறது. தகுதியுள்ள தற்காலிக தொழிலாளர்கள் Permanency Act of 1981–ன் படி ஒவ்வொரு ஆண்டும் நிரந்தரம் செய்யப்படுகிறார்கள். இக்கழகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் எண்ணிக்கை மொத்தம் 215 ஆகும் (அயற்பணி அலுவலர்கள் உள்பட).

**(ஆ) மறுவாழ்வு**

இலங்கையிலிருந்து 4082 தாயகம் திரும்பியோர் தொழிலாளர்கள் தங்குவதற்கு இலவச குடியிருப்பு, நிரந்தர வேலைவாய்ப்பு போன்ற பல வசதிகளைச் செய்த அவர்களின் குடும்பங்களில் ஒளியேற்றிய பெருமை இக்கழகத்திற்கு உண்டு. இக்குடும்பத்தைச் சார்ந்த இரு நபர்களுக்கு நிரந்தர

வேலை வாய்ப்பும், அதிக மகசூல் காலங்களில் அவர்களின் குடும்பத்தைச் சார்ந்தோருக்கு தற்காலிக வேலைவாய்ப்பும் வழங்கி வருகிறது.

**(இ). தொழிலாளர் மற்றும் பணியாளர் நலப்பணி**

இக்கழகத்தில் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு வாடகையில்லா வீட்டுவசதி, குடிநீர் வசதி, இலவச மருத்துவ வசதி, குழந்தைகள் காப்பகம், ஆரம்பக் கல்வி, பிரசவ கால விடுப்பு, ஊதியத்துடன் கூடிய விடுப்பு, குளிர்கால உடை, இலவச தேநீர், போனஸ் மற்றும் கருணைத் தொகை, இலைப்பறிக்கும் தொழிலாளர்களுக்கு ஊக்கத்தொகை, வருங்கால வைப்புநிதி, பணிக்கொடை மற்றும் பல்வேறு சலுகைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. பணியாளர்கள், அரசு நிர்ணயித்துள்ள சம்பள விகிதப்படி மாதச் சம்பளம் பெற்று வருகின்றனர்.

**(i). குறைந்த பட்ச ஊதியம்**

குறைந்த பட்ச ஊதிய சட்டம் 1948–ன் கீழ் இக்கழக தொழிலாளர்களுக்கு தின ஊதியம் நிர்ணயிக்கப்பட்டு வழங்கப்படுகிறது. மேலும் 3 மாதங்களுக்கு ஒரு முறை தொழிலாளர்களின் பஞ்சப்படி நுகர்வோர் விலைவாசி பட்டியலின்படி தொழிலாளர்களுக்கு உயர்த்தி வழங்கப்படுகிறது. அதன்படி, கடந்த 01.07.2021 முதல், இக்கழக தொழிலாளர்களுக்கு தின ஊதியம் ரூ.340.07 ஆக நிர்ணயிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

தற்போது அரசு தொழிலாளர் நலன் மற்றும் திறன் வளர்ச்சி துறை அரசாணை எண்.330 (தொழிலாளர் நலன் மற்றும் திறன் வளர்ச்சி துறை) நாள் 30.07.2021 குறைந்த பட்ச சட்டத்தின் கீழ் தேயிலைத் தோட்ட தொழிலாளர்களின் அடிப்படை ஊதியத்தை ரூ.183.50 முதல் ரூ.228.00 மற்றும் மாறுபடும் அகவிலைப்படியினையும் உயர்த்தி வழங்க முன் அறிவிப்பு

வழங்கப்பட்டுள்ளது. மேற்படி ஊதிய உயர்வு குறித்து இறுதி ஆணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் வளர்ச்சி துறையிலிருந்து பெறப்பட்டவுடன் இக்கழக இயக்குநர்கள் குழுமத்தில் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டு அதன் விவரம் அரசு சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறைக்கு அனுப்பி உரிய ஆணை பெறப்பட்டு அமுல்படுத்தப்படும்,

மேற்படி உயர்த்தப்பட்ட ஊதியத்தை இக்கழக தொழிலாளர்களுக்கு அமுல்படுத்தும் பட்சத்தில் கீழ்கண்டவாறு கூடுதல் தொகை செலவாகும்.

தற்போதைய ஊதியம் ரூ.340.07 x 25 நாட்கள் x 3800 = ரூ.3,23,06,650.00

புதிய ஊதியம் ரூ.424.57x 25 நாட்கள் x 3800 = ரூ.4,03,34,150.00

--------------

வித்தியாசம் + ரூ.80,27,500.00

(மாதம் ஒன்றுக்கு)

--------------

**(ii). இலைபறிப்பு ஊக்கத்தொகை**

தொழிலாளர்களை ஊக்குவிக்க இலை பறிப்பு ஊக்கத்தொகை கீழ்க்கண்டவாறு தற்போது வழங்கப்பட்டு வருகிறது.

| வ.எண் | இலைபறிப்பு விவரம் (கிலோ) | ஊக்கத்தொகை விவரம் |
|---|---|---|
| 1 | 25 கிலோ வரை | ஊக்கத்தொகை இல்லை |
| 2 | 26 கிலோ முதல் 35 கிலோ வரை | ரூ.0.50 கிலோவிற்கு |
| 3 | 36 கிலோ முதல் 40 கிலோ வரை | ரூ.1.00 கிலோவிற்கு |
| 4 | 41 கிலோ முதல் 50 கிலோ வரை | ரூ.2.00 கிலோவிற்கு |
| 5 | 51 கிலோ மற்றும் அதற்கு மேல் | ரூ.3.00 கிலோவிற்கு |

**5. உள்கட்டமைப்பு விவரங்கள்**

| | | |
|---|---|---|
| 1 | மொத்த தொழிலாளர்களின் குடியிருப்பு | 4008 |
| 2 | அலுவலகர்கள் மற்றும் பணியாளர்களின் குடியிருப்பு | 320 |
| 3 | கழக மருத்துவமனை (வால்பாறை, கோத்தகிரி, சேரம்பாடி) | 3 |
| 4 | தங்கும் விடுதி (வால்பாறை, குன்னூர், சேரம்பாடி, பாண்டியார், பந்தலூர்) | 4+1 |
| 5 | குடில் | 2 |
| 6 | தொழிற்சாலைகள் | 8 |
| 7 | குடியிருப்பு அல்லாத கட்டிடம் | 220 |

அனைத்து அடிப்படை வசதிகளும் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

### 6. உரமிடுதல், பசுந்தேயிலை மகசூல் மற்றும் தேயிலைத்தூள் உற்பத்தி

உரமிடுதல், பசுந்தேயிலை மகசூல் மற்றும் உற்பத்தி செய்யப்பட்ட தேயிலைத்தூள் விவரம் கீழ்க்கண்டவாறு அளிக்கப்படுகிறது.

| வருடம் | உரமிடுதல் | பசுந்தேயிலை மகசூல் (இலட்சம் கிலோவில்) | மகசூல் ஒரு எக்டருக்கு (இலட்சம் கிலோவில்) | உற்பத்தி செய்யப்பட்ட தேயிலைத்தூள் (இலட்சம் கிலோவில்) |
|---|---|---|---|---|
| 2006–07 | 1 | 410.17 | 9514 | 97.52 |
| 2007–08 | 1 | 418.33 | 9704 | 100.59 |
| 2008–09 | 1 | 410.26 | 9517 | 101.05 |
| 2009–10 | 2 | 427.16 | 9909 | 103.99 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2010–11 | 1 | 392.32 | 9100 | 93.22 |
| 2011–12 | 0 | 375.34 | 8706 | 89.57 |
| 2012–13 | 0.5 | 326.68 | 7624 | 82.87 |
| 2013–14 | 2 | 375.43 | 8708 | 94.80 |
| 2014–15 | 0 | 353.56 | 8201 | 84.20 |
| 2015–16 | 0 | 299.89 | 6956 | 72.77 |
| 2016–17 | 1 | 282.32 | 5452 | 74.27 |
| 2017–18 | 0 | 285.91 | 6632 | 70.38 |
| 2018–19 | 0.5 | 255.46 | 5926 | 60.08 |
| 2019–20 | 1 | 298.58 | 7366 | 75.64 |
| 2020–21 | 1 | 321.27 | 7927 | 82.81 |

உபாசி விதிமுறைகள் நான்கு முறை உரமிட பரிந்துரைத்தாலும், நிதி பற்றாக்குறை காரணமாக கடந்த ஆண்டுகளில் நான்கு முறை உரமிடவில்லை. இது அரசிடம் ஒதுக்கப்பட்ட நிதியுடன் மகசூலைக் கணிசமாகக் குறைக்கிறது. 2020–21 ஆம் ஆண்டில் உரமிடுதல் எண்ணிக்கையை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இது இந்த ஆண்டு விளைச்சலில் பிரதிபலிக்கும். இதற்கு வருடம் ஒன்றிற்கு ரூ. 6 கோடி தோராயமாக தேவைப்படுகிறது.

## 7. நிதிநிலை செயல்பாடு

ஆண்டுவாரியாக உற்பத்தி செலவு, சராசரி விற்பனை விலை மற்றும் கடந்த 12 ஆண்டுகளாக திரட்டப்பட்ட இழப்பு பின்வருமாறு

| வ.எண் | வருடம் | உற்பத்தி | சராசரி விலை | திரட்டப்பட்ட |
|---|---|---|---|---|

| | | செலவு | கிலோவிற்கு (ரூ.) | நட்டம் (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | 2008–09 | 57.82 | 67.61 | –1079.41 |
| 2 | 2009–10 | 68.04 | 78.34 | –32.01 |
| 3 | 2010–11 | 80.73 | 64.79 | –1715.46 |
| 4 | 2011–12 | 74.54 | 67.54 | –2593.90 |
| 5 | 2012–13 | 84.47 | 88.13 | –2191.33 |
| 6 | 2013–14 | 88.95 | 88.29 | –2422.48 |
| 7 | 2014–15 | 95.53 | 68.44 | –4050.24 |
| 8 | 2015–16 | 101.20 | 74.55 | –6159.83 |
| 9 | 2016–17 | 102.21 | 97.83 | –7076.59 |
| 10 | 2017–18 | 108.98 | 74.65 | –9654.85 |
| 11 | 2018–19 | 115.51 | 89.11 | –19383.65 |
| 12 | 2019–20 | 116.03 | 83.65 | –22649.38 |
| 13 | 2020–21 | 117.23 | 118.25 | –21850.00 |

**மாதவாரியான வருவாய் மற்றும் செலவினங்கள்**

| மாதம் | வருவாய் (ரூ.இலட்சத்தில்) | செலவு (ரூ.இலட்சத்தில்) | லாபம் / நட்டம் (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| **ஏப்ரல் 2021** | **531.89** | **881.50** | **-349.60** |
| **மே 2021** | **1278.92** | **950.00** | **328.92** |
| **ஜுன் 2021** | **821.84** | **898.00** | **-76.15** |
| **ஜுலை 2021** | **470.24** | **796.12** | **-325.87** |
| **ஆகஸ்ட்2021** | **409.67** | **746.59** | **-336.91** |
| **செப்டெம்பர் 2021** | **650.06** | **753.29** | **-103.22** |
| **Total** | **4162.62** | **5025.50** | **-862.83** |

## 8. விற்பனை

### (அ). ஏல விற்பனை

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தால் தயாரிக்கப்படும் தேயிலைத்தூளில், 80 சதவிகித தேயிலைத்தூள் குன்னூர், கோயம்புத்தூர் மற்றும் கொச்சி ஆகிய ஏல விற்பனை மையங்கள் மூலமாக பொது ஏலத்தில் விற்பனை செய்யப்படுகிறது. கடந்த 2020–21ல் 71.08 இலட்சம் கிலோ தேயிலைத்தூள் பொது ஏலம் மூலமாக சராசரி விலையில் ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

### (ஆ). நேரடி மொத்த விற்பனை

ஏல விற்பனை மையங்கள் மூன்றில் பெறப்படும் உயர் ஏல விற்பனை விலையின் அடிப்படையில் மொத்த விற்பனையும் செய்யப்படுகின்றன. அதிக அளவில் தேயிலைத்தூள் கொள்முதல் செய்பவர்களை நேரில் சந்தித்து தற்போதுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி தேயிலைத்தூளை நேரடியாக விற்பனை செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கடந்த 2020–21–ம் ஆண்டில், 7.97 இலட்சம் கிலோ தேயிலைத்தூள் சராசரி விலையில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

### (இ). சில்லறை விற்பனை

கடந்த 2020–21–ம் ஆண்டில் 126 இலட்சம் கிலோ தேயிலைத்தூள் சில்லரை விற்பனை மூலம் சராசரி விலையில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இக்கழக தேயிலைச் சிப்பங்கள், மொத்த விற்பனையாளர்கள், சில்லரை விற்பனையாளர்கள் மற்றும் விற்பனை மையங்கள் என்ற முறையில் பொது மக்களை சென்றடைகின்றது. மேலும், தபால் துறை அலுவலகங்களிலும், காவல்துறை அங்காடிகளிலும், தமிழ்நாடு நுகர்வோர் பண்டக சாலை மூலமாகவும் டேன்டீ தேயிலை தூளினை விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

**(ஈ). ஆன்லைன் (இணைய தள வர்த்தகம்)**

இக்கழக தயாரிப்புகளான பி.ஓ.பி., குறிஞ்சி, ஹோட்டல் பிளண்ட், இலாசன் கிப்ட் பேக், கிரீன் டீ மற்றும் ஒயிட் டீ போன்ற ரகங்களை கொண்டு இந்நாட்டின் மூலை முடுக்கெல்லாம் டேன்டீ தயாரிப்புகள் சென்றடைய இணைய தள வர்த்தகத்திலும் இக்கழகம் இணைந்துள்ளது. இ–பே amazon.in and www.thetamilnaduteaplantation.in என்ற இணைய தளத்தில் இக்கழகம் பதிவு செய்த தேயிலைத்தூளை விற்பனை செய்து வருகின்றது.

**(உ). குறுமிளகு விற்பனை**

ஒப்பந்தம் மற்றும் ஏல விற்பனை மூலமாக கடந்த 2020–2021 ஆண்டில் 49999 கிலோ குறுமிளகு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

**9. வரவு மற்றும் செலவு விவரங்கள் 2020–2021**

| | |
|---|---|
| வரவு | ரூ.10182.76 இலட்சம் |
| செலவு | ரூ. 9382.81 இலட்சம் |
| நிகர லாபம் / நட்டம் | (+) ரூ.799.95 இலட்சம் |

**10. செயல் திட்டம்**

பசுந்தேயிலை மகசூல் மற்றும் தேயிலைத்தூள் உற்பத்தி இலக்கு நிர்ணயம் (2020-21)

| வருடம் | பசுந்தேயிலை மகசூல் (இலட்சம் கிலோவில்) | எதிர்பார்க்கும் உற்பத்தி செய்யப்படும் தேயிலைத்தூள் (இலட்சம் கிலோவில்) |
|---|---|---|
| 2021-22 | 368 | 84.64 |

**11. தொழிற்சாலைகளின் தரம் மேம்படுத்துதல்**

அரசு ஆணை எண் 80, சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை நாள் 9.8.2019ல் ரூ.16.72 கோடி இக்கழகத்திற்கு கீழ்கண்ட தொழிற்சாலைகளை மேம்படுத்துவதற்காக வழங்கப்பட்டுள்ளது.

| வ.எண். | தொழிற்சாலையின் பெயர் | வழங்கப்பட்ட பணம் (ரூ. கோடியில்) |
|---|---|---|
| 1 | பாண்டியார் | 5.85 |
| 2 | நெல்லியாளம் | 3.26 |
| 3 | குயின்சோலா | 5.61 |
| 4 | டைகர்ஹில் | 2.00 |
| | மொத்தம் | 16.72 |

அரசு ஆணை எண் 26, சுற்றுச்சூழல் மற்றும் வனம் (வனம்8) துறை நாள் 14.02.2020-ன்படி தொழிற்சாலைகளுக்கு இயந்திரங்கள் மற்றும் தளவாடங்களை கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தப்புள்ளிகளை இறுதி

முடிவு செய்வதற்காக தொழில்நுட்ப ஆய்வு குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் இக்கழகத்தின் பாண்டியார், நெல்லியாளம், குயின்சோலா மற்றும் டைகர்ஹில் ஆகிய தொழிற்சாலைகளுக்கு இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் (74 இயந்திரங்கள்) கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு ஆய்வுக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் ஏற்புக்குழுவிற்கு பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டு, ஏற்புக்குழுவின் 18.2.2021-ம் நாளது கூட்ட நடவடிக்கையின்படி கொள்முதல் ஆணைகள் வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பாண்டியார், நெல்லியாளம், குயின்சோலா மற்றும் டைகர்ஹில் ஆகிய தொழிற்சாலைகளில் இயந்திரங்களை நிறுவுவதற்கான கட்டுமான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அரசு கடித எண் 20393/FR8-2019-2 சுற்றுச்சூழல் மற்றும் வனம் (FR8) நாள் 23.03.2020-ல் அறிவித்துள்ளபடி ரூ.8.26 கோடி தொகையானது தேயிலைச் சந்தையில் ஏற்பட்டுள்ள ஏற்றத்தாழ்வுகளின் காரணமாக பிப்ரவரி மற்றும் மார்ச் 2020 மாதத்திய பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்களின் சம்பளம் வழங்கப்பட்டுள்ளது.

## 12. நிதி மேம்பாடு (பணப்பயன்பாட்டு விவரங்கள்)

| | |
|---|---|
| சராசரி பசுந்தேயிலை உற்பத்தி | 30.00 இலட்சம் / மாதம் |
| தேயிலை உற்பத்தி மற்றும் விற்பனை | 6.00 இலட்சம் / மாதம் |
| சராசரி விற்பனை வருமானம் | 5.00 கோடி / மாதம் |

| | |
|---|---|
| சராசரி செலவீனம் | 6.50 கோடி / மாதம் |

அரசாணை எண் (1டி) 107 சுற்றுச்சூழல் (ம) வனம்(8) வனத்துறை நாள் 31.07.2018 மற்றும் அரசாணை எண் 266 நாள் 20.09.2018–ல் வழிவகைகளின் கீழ் முன்பணமாக ரூ.39.95 கோடி தொகை கீழ்காண் தலைப்புகளின் கீழுள்ள செலவீனத்திற்காக தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. அதன் விவரம் பின்வருமாறு

| வ. எண். | விவரம் | ஒதுக்கப்பட்ட தொகை (ரூ.) | பயன்படுத்தப்பட்ட தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1 | வங்கிகடன் திரும்ப செலுத்த வேண்டியது | 12.00 கோடி | 12.00 கோடி |
| 2 | பணிக்கொடை / ஓய்வூதிய பலன்கள் | 13.09 கோடி | 13.09 கோடி |
| 3 | கடனீந்தோருக்கு செலுத்த வேண்டிய கடன் | 2.30 கோடி | 2.30 கோடி |
| 4 | நடைமுறை மூலமான தேவைக்காக | 6.00 கோடி | 6.00 கோடி |
| 5 | உரமிடுதலுக்காக | 2.15 கோடி | 2.15 கோடி |
| 6 | தொழிலாளர் குடியிருப்பு | 4.41 கோடி | -- |
| | மொத்தம் | 39.95 கோடி | 35.54 கோடி |

மேற்கண்ட தொகையில் ரூ.35.54 கோடி தொகை மேற்கூறிய விபரத்திற்காக செலவழிக்கப்பட்டுள்ளது. மேலும் ரூ.4.41 கோடி தொகையை தொழிலாளர் குடியிருப்பு செப்பனிடவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

**இக்கழகத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ள தொழிலாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கு நிதி நெருக்கடியின் காரணமாக கடந்த 2021 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட வேண்டிய பணப்பலன்கள் விவரங்கள் கீழ்வருமாறு**

பணிக்கொடை

| வருடம் | பணிக்கொடை<br>ரூ. இலட்சத்தில் | குறிப்பு |
|---|---|---|
| 2017 | 93.28 | அக்டோபர் முதல் டிசம்பர் வரை வழங்கப்பட வேண்டியது |
| 2018 | 351.10 | வழங்கப்பட வேண்டியது |
| 2019 | 255.00 | வழங்கப்பட வேண்டியது |
| 2020 | 322.00 | வழங்கப்பட வேண்டியது |
| 2021 (upto March 2021) | 104.12 | வழங்கப்பட வேண்டியது |
| Total | **1125.50** | வழங்கப்பட வேண்டியது |

விடுப்புடன் கூடிய ஊதியம் (01.04.2018 முதல் 31.03.2021 வரை

| வருடம் | பணிக்கொடை<br>ரூ. இலட்சத்தில் | குறிப்பு |
|---|---|---|
| 2018 | .89.58 | வழங்கப்பட வேண்டியது |
| 2019 | 130.98 | வழங்கப்பட வேண்டியது |
| 2020 | 100.71 | வழங்கப்பட வேண்டியது |
| 2021(upto March 2021) | .58.09 | வழங்கப்பட வேண்டியது |
| Total | **379.36** | வழங்கப்பட வேண்டியது |

மருத்துவ ஊதியம் (01.04.2016 முதல் 31.03.2021 வரை)

| வருடம் | மருத்துவ ஊதியம் ரூ. இலட்சத்தில் | குறிப்பு |
|---|---|---|
| 2016 | 20.95 | வழங்கப்பட வேண்டியது |
| 2017 | 21.36 | வழங்கப்பட வேண்டியது |
| 2018 | 10.87 | வழங்கப்பட வேண்டியது |
| 2019 | 9.70 | வழங்கப்பட வேண்டியது |
| 2020 | 4.08 | வழங்கப்பட வேண்டியது |
| 2021 | 1.49 | வழங்கப்பட வேண்டியது |
| Total | **68.45** | வழங்கப்பட வேண்டியது |

முனையவிடுப்பு ஊதியம் (01.01.2016 முதல் 31.03.2021 வரை)

| வருடம் | முனையவிடுப்பு ஊதியம் ரூ. இலட்சத்தில் | குறிப்பு |
|---|---|---|
| 2016 | 84.90 | வழங்கப்பட வேண்டியது |
| 2017 | 132.82 | வழங்கப்பட வேண்டியது |
| 2018 | 49.45 | வழங்கப்பட வேண்டியது |
| 2019 | 59.86 | வழங்கப்பட வேண்டியது |
| 2020 | 30.92 | வழங்கப்பட வேண்டியது |
| 2021 | 1.32 | வழங்கப்பட வேண்டியது |
| Total | **359.27** | வழங்கப்பட வேண்டியது |

ஈட்டிய விடுப்பு ஒப்புவிப்பு (2017–2019)

| வருடம் | ஈட்டிய விடுப்பு ஒப்புவிப்பு<br>ரூ. இலட்சத்தில் | குறிப்பு |
|---|---|---|
| 2017 | 45.18 | வழங்கப்பட வேண்டியது |
| 2018 | 43.73 | வழங்கப்பட வேண்டியது |
| 2019 | 42.21 | வழங்கப்பட வேண்டியது |
| **Total** | **131.12** | வழங்கப்பட வேண்டியது |

**இக்கழகத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ள தொழிலாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கு கடந்த 2021 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட வேண்டிய பணப்பலன்கள் கீழ்வருமாறு**

1. **நிலுவையிலுள்ள பணப்பலன்கள்**

| **விபரம்** | **தொகை (ரூ. இலட்சத்தில்)** |
|---|---|
| பணிக்கொடை (01.10.2017 முதல் 31.03.2021 வரை) | 1125.50 |
| விடுப்புடன் கூடிய ஊதியம் (01.04.2018 முதல் 31.03.2021 வரை) | 379.36 |
| மருத்துவ ஊதியம் (01.04.2016 முதல் 31.03.2021 வரை) | 68.45 |
| முனையவிடுப்பு ஊதியம் (01.01.2016 முதல் 31.03.2021 வரை) | 359.27 |
| ஈட்டிய விடுப்பு ஒப்புவிப்பு (2017–2019) | 131.12 |
| **மொத்தம்** | **2063.70** |

2. **ஒரு வருடத்திற்கு வழங்கப்பட வேண்டிய அத்தியாவசிய செலவீனங்கள்**

| விபரம் | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|
| மேற்பார்வையாளர் நிலுவை ஊதியம் | 24.03 |
| தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய புதிய குறைந்த பட்ச ஊதியம் 2021–22 | 984.27 |
| திருத்தப்பட்ட ஊதியம் கொடுக்கப்பட வேண்டிய தொகை (ரூ.50.38 இலட்சம் மாதத்திற்கு) 2021–22 | 604.56 |
| போனஸ் 20% (10%வழங்க ரூ.358,80 இலட்சம் ஆகும்) | 717.60 |
| தொழிற்சாலைகளை நவீனமயமாக்குதல்** | 826.00 |
| யூகோ வங்கி cash credit | 1000.00 |
| ***தற்போது தேயிலை விலை வீழ்ச்சியால் அடுத்த 7 மாதங்களுக்கு பற்றாக்குறையை சமாளிக்க – ரூ.1.5 கோடி ஒரு மாதத்திற்கு | 1050.00 |
| களங்களுக்கு உரமிட மற்றும் ஆய்வுக்கூடம் அமைப்பதற்கு | **700.00** |
| **மொத்தம்** | **5906.46** |

**தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்திற்கு ரூ.79 கோடியே 70 இலட்சம் நிதி உடனடியாக தேவைப்படுகிறது.**

** அரசிடம் அனுமதி பெற்று கொரோனா காலம் 2019–20 ஆம் ஆண்டு இரண்டு மாதத்திற்கு பிப்ரவரி மற்றும் மார்ச் 2020 சம்பளத் தேவைக்காக, தொழிற்சாலைகளை நவீனமயமாக்குதல் தொகையில் செலவழிக்கப்பட்டது

*** கடந்த ஏப்ரல் மாதம் முதல், ஒவ்வொரு வாரமும் 3 இலட்சம் முதல் 3.5 இலட்சம் கிலோ வரை தேயிலைத்தூள் சந்தைப்படுத்தப்படுகிறது. இதில் 1.5 இலட்சம் முதல் 1.8 இலட்சம் கிலோ வரை விற்பனையாகிறது. இதனால் ரூ 1 கோடி முதல் 1.5 கோடி வரை வருமானம் ஈட்டப்படுகிறது என தெரிவிக்கலாகிறது. தொழிலாளர்கள் கூலி மற்றும் பணியாளர்கள்

சம்பளம், கொள்முதல் செலவு, மின்கட்டணம், மற்றும் இதர அவசிய செலவுகள் – ரூ.6.5 கோடி வரை ஆகிறது. மற்றும் தற்போது தேயிலை விலை வீழ்ச்சியால் மாத வருவாய் ரூ 4 கோடி முதல் ரூ.6 கோடி வரை ஈட்டப்படுகிறது. எனவே, பற்றாக்குறையை சமாளிக்க ரூ.1 கோடி முதல் ரூ.1.5 கோடி வரை யூகோ வங்கி மூலம் பெறப்படுகிறது. மேலும், அக்டோர் 2021 முதல் மார்ச் 2022 வரை 7 மாதங்களுக்கு ரூ.10.50 கோடி தேவைப்படுகிறது.

**13. இதர நடிடவடிக்கைகள்**

பொது விநியோக வழங்கல் (Public Distribution System) முறையில் சட்டீஸ்கர் அரசின் மூலமாக தேயிலைத்தூள் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**வனக்கோட்டத்திலிருந்து பெறப்படும் விறகுகள்**

1. அரசாணை எண் 48 சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை நாள் 26.02.2018–ன் ஆணையின்படி நீலகிரி வனக்கோட்டத்திலிருந்து 799 மெட்ரிக் டன் விறகு கொள்முதல் செய்யப்பட்டு ரூ.1200/– ஒரு மெட்ரிக் டன்னுக்கு என்ற சலுகை விலையில் இக்கழக தேயிலைத் தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்பட்டது.
2. அரசாணை எண் 368 சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை நாள் 18.12.2018–ல் இக்கழகத்திற்கு 13871.893 மெட்ரிக் டன் விறகு நீலகிரி வனக்கோட்டத்திலிருந்து தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழக தொழிற்சாலைகளுக்கு ரூ.1875/– மெட்ரிக் டன் ஆக சலுகை விலையில் வழங்க ஆணைகள் பெறப்பட்டது. மேலும், ரூ.1875/– ஒரு மெட்ரிக் டன்னுக்கு என்ற விலையில் 15000 மெட்ரிக்டன் லிறகுகள் கேட்டு அரசிற்கு பிரேரணை ஒன்று இவ்வலுவலக கடித எண்

620/2020/எம்3 நாள் 28.01.2020 அன்று அனுப்பப்பட்டுள்ளது. அரசின் ஆணைகள் நிலுவையிலுள்ளது.

**அதிகப்படியான சில்வர்ஓக் மரங்களை அகற்றுதல்**

மொத்த தேயிலைச் செடிகளின் எண்ணிக்கை – 369.97 இலட்சம்

சில்வர் ஓக் மரங்கள் எண்ணிக்கை – 3,94,085

சில்வர் ஓக் மரங்களை வெட்டுவதற்கு அனுமதி பெற மேலாண்மைத் திட்டம் முன்மொழிவு இந்திய சுற்றுச்சூழல் மற்றும் வன காலநிலை மாற்றம் அரசுக்கு முதன்மை வனத்துறை பாதுகாவலர் மூலம் அனுப்பப்பட்டுள்ளது.

**கூடலூரில் உயர் வேக டீசல் நுகர்வோர் பம்ப் (HSD – HIGH SPEED DIESEL) நிறுவுதல்**

- நுகர்வோர் பம்ப் நிறுவியதன் மூலம் டீசல், எரிபொருள் விறகு கொள் முதல் செய்வது போன்ற செலவினங்கள் குறைக்கப்பட்டுள்ளது.
- இதன் மூலமாக ஆண்டிற்கு தோராயமாக ரூ.50 இலட்சம் சேமிக்கப்படும்.

**தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் வால்பாறை பகுதியை தமிழ்நாடு வனத்துறையிடம் ஒப்படைத்தல்**

1990 ஆம் ஆண்டில் ஆனைமலை புலிகள் காப்பக பகுதியில் 2642.51 ஹெக்டேர் நிலத்தை தேயிலை (2480.20 ஹெக்டேர்) சாகுபடி செய்வதற்கும், (162.31 ஹெக்டேர்) பரப்பளவை சின்கோனா தோட்டமாக பராமரிப்பதற்காகவும் தமிழக அரசு தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்திற்கு ஒதுக்கியிருந்தது. பின்னர் விதிக்கப்பட்ட தடையை ஆகஸ்ட் 1994 வரை 1085.50 ஹெக்டேர்

தேயிலை மட்டும் பயிரிடப்பட்டது. 2012 ஆம் ஆண்டில் தேயிலை பயிரிடப்பட்ட 129.142 ஹெக்டேர் பரப்பளவும், பயிரிடப்படா நிலம் 1281.75 ஹெக்டேர் பரப்பளவும் மீள வனத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டன. தற்போது, டான்டீ வால்பாறையில் 1069.308 ஹெக்டேர் பரப்பளவை தன்னகத்தே கொண்டுள்ளது. இதில் 956.358 ஹெக்டேர் பரப்பளவில் தேயிலைத் தோட்டங்களும், 112.95 ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்படாத நிலங்களும் உள்ளன. இங்கு ஏறக்குறைய 780 தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர். இது விதிமுறைகளின்படி உண்மையான தேவையான 1674 எண்ணிக்கைக்கு தொழிலாளர்களின் உண்மையான தேவைக்கு 50 சதவிகிதம் குறைவாக உள்ளது.

இந்த பகுதி ஆனைமலை புலிகள் காப்பக மைய மண்டலத்தில் அமைந்துள்ளது. மேலும், யானைகளின் வழித்தடம் மற்றும் இடம்பெயர்வு பாதையின் ஒரு பகுதியாக இவ்விடம் அமைந்துள்ளது. சமீப காலமாக இந்த பகுதிகளில் மனித–யானை மோதல்கள் அதிகரித்து வருகின்றன. சிறுத்தை தாக்குதல்களும் அதிகரித்துள்ளன. காட்டெருமை மற்றும் சிறுத்தைகளால் ஏற்படும் தாக்குதல்களால் மட்டுமின்றி யானை தாக்குதல்களால் டேன்டீ பகுதியில் 1994 ஆம் ஆண்டிலிருந்து ஒன்பது மனித உயிரிழப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. வால்பாறை பகுதியில் வசிக்கும் தொழிலாளர்கள் மேற்கண்ட நிகழ்வுகளால் நிரந்தர அச்சுறுத்தலின் கீழ் பணிபுரிந்து வருகின்றனர். எனவே, அவர்களால் தோட்ட பணிகளை திறம்பட செயல்பட இயலவில்லை. எனவே, வன உயிரினங்களுக்கு இலகுவாக நடமாட்டங்களுக்காகவும், வன தாவரங்கள் மற்றும் வன விலங்குகளை

பாதுகாப்பதற்காகவும் மற்றும் புலிகள் காப்பக பகுதிகளில் வழித்தடங்களை பேணுவதற்காகவும், இப்பகுதியினை மொத்தமாக வனத்துறைக்கு மீள ஒப்படைப்பதை தவிர வேறேதும் வழியில்லை.

மேற்காண் பகுதியினை ஒப்படைப்பதற்கான கருத்துரு, முதன்மை வனப்பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்), சென்னை அவர்களுக்கு இவ்வலுவலக கடித எண் 11083/2017/பி நாள் 03.01.2018–ல் அனுப்பப்பட்டுள்ளது. அக்கருத்துருவில், தற்பொழுதுள்ள தேயிலைத் தோட்டங்கள், சில்வர் ஓக் மரங்கள், யூகலிப்டஸ் மரங்கள் மற்றும் இதர நிலையான சொத்துக்களின் தற்போதைய மதிப்பினை கணக்கிட்டு இழப்பீட்டுத் தொகையாக ரூ.72.5 கோடி கோரப்பட்டுள்ளது. இவ்விழப்பீட்டுத் தொகை, டான்டீயின் வளர்ச்சி மற்றும் மறுமலர்ச்சிக்காகவும், புலம் பெயரும் தொழிலாளர்களின் மறுவாழ்விற்காகவும் பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இக்கழகத்தின் இயக்குநர்கள் குழுவின் 197–வது கூட்டத்தில், மேற்கூறிய பகுதிகளை வனத்துறையிடம் ஒப்படைப்பது குறித்து ஆய்வறிக்கை மற்றும் பரிந்துரைகளை வழங்க ஒரு குழுவை அமைக்க தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு, அதன்படி அரசு ஆணை எண் (டி) 2212 சுற்றுச்சூழல் மற்றும் (எப்.ஆர்.9) துறை நாள் 26.07.2018–ன் மூலம் குழு அமைக்கப்பட்டது. அக்குழுவின் அறிக்கை எதிர்நோக்கப்பட்டுள்ளது.

டான்டீயில் தற்போதுள்ள சூழ்நிலையில், டேன்டீ தொழிற்சாலைகளை நவீனமயமாக்குதல் தொடர்பான நடவடிக்கைகளில் தீவிர கவனம் செலுத்தவேண்டியுள்ளதாலும், வால்பாறையிலுள்ள ஆனைமலை புலிகள்

காப்பகத்தில் யானைகள் வழித்தடங்களை பராமரித்து மனித விலங்கு மோதல்களை ஒரு முடிவிற்கு கொண்டு வரவும், டேன்டீ இப்பகுதியில் இயன்றளவு விரைவில் தனது நடவடிக்கைகளை கைவிட்டு இப்பகுதிகளை அசையா சொத்துக்களுடன் வனத்துறைக்கு ஒப்படைக்க வேண்டியுள்ளது. இழப்பீட்டுத் தொகையைப் பொறுத்தவரையில், குத்தகை நிபந்தனைகளின் அடிப்படையில் மேற்குறிப்பிட்ட குழுவிலிருந்து அறிக்கை பெற்றவுடன் புதிதாக முடிவு செய்து கொள்ளலாம். அதுவரையில் ரயான் தேயிலைத் தொழிற்சாலை பராமரிப்பு பணிகளை தவிர வேறேதும் விரிவாக்கப்பணிகள் மேற்கொள்ளப்படாது. மேலும், குறிப்பிடப்பட்டுள்ள நேர அட்டவணையின்படி ஒரு வருட காலத்திற்குள் அனைத்து பணிகளும் கட்டம் கட்டமாக நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**பணியாளர் பகுத்தறிவு**

இக்கழகத்தில் மனித சக்தி வலிமையை பகுத்தறிவுப்படுத்தவும், உபரி1 பதவிகளை அடையாளம் காணவும் அரசாங்கம் பல்வேறு கடிதங்களில் அறிவுறுத்துகிறது. இது தொடர்பாக 2 இளநிலை வரைதொழில் அலுலவர்கள், தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம் மற்றும் சுற்றுலா மேம்பாட்டுக் கழகத்திற்கு மாற்றப்பட்டுள்ளனர். மேலும், 4 அலுவலக உதவியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் வனத்துறையில் பணியாற்ற விருப்பம் தெரிவித்துள்ளனர். எனவே, சேமிப்பு ஆண்டுக்கு சுமார் ரூ.35 இலட்சம் ஆகும்.

**மருத்துவ மனைகள்**

இக்கழகத்தின் கட்டுப்பாட்டில் தொழிலாளர்கள், பணியாளர்கள் மற்றும் அருகில் உள்ள பொதுமக்களுக்கு பயன்படும் வகையில் மூன்று மருத்துவ மனைகளை இயக்கி வருகிறது. இவற்றில் 5 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை ஒன்று கோத்தகிரியிலும், 25 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை சேரம்பாடியிலும் மற்றும் 20 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை வால்பாறையிலும் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. 2006–2007 –ம் ஆண்டு முதல் இக்கழக மருத்துவமனைகளில் தற்காலிக தொழிலாளர்களுக்கும், அவரது குடும்பத்தை சார்ந்தோருக்கும் மருத்துவ வசதிகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. இக்கழகத்தின் கடுமையான நிதி நிலைமையால், மேற்கண்ட மூன்று மருத்துவ மனைகளை பராமரிக்க இயல முடியாத நிலையில் இம்மருத்துவ மனைகளை சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறைக்கு மாற்றுவதற்காக இக்கழகத்தின் ந.க.எண்.எல்1/6912/2017 நாள் 17.02.2021–ன் மூலம் கருத்துரு அனுப்பப்பட்டு அரசு ஆணை எதிர்பார்க்கப்படுகின்றது.

சேரம்பாடி, கோத்தகிரி மற்றும் சின்கோனா தோட்ட மருத்துவமனைகளை ஒப்படைப்பதன் மூலம், பின்வரும் செலவினங்களை எதிர்காலத்தில் தவிர்க்கலாம். மேலும், இந்த நடவடிக்கையினால் ஆண்டிற்கு ரூ.160.80 இலட்சம் சேமிக்கப்படுகிறது.